# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,894—1970 පෙබරවාරි 20 වැනි සිකුරාදා—1970.2.20

14,894 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 147 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 166 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 169 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 174 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 174 |


## பதவிகள் — வெற்றிடம்

### “ இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் ”

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ‘ நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ’ தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆம் திசெம்பர் மீ 14 ந் உ.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயனைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. A 4/X 2197/70

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### வித்தியாதிபதி பதவி—II ஆந் தரம்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள II ஆந் தர வித்தியாதிபதி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.3.9.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.3.13.

குறிப்புகள்—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதைஉறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையு மாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந்நோக் கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப் பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லா விடின் அவருடைய நியமனம் ; காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட் சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத் திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற் குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. **சம்பளம்.**—இப்பதவிற்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வரு மாறு :— புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களுக்கு—ரூ. 14,400— 3 × 480—3 × 600—ரூ. 17,640 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என் பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.3.9 ந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர் களுக்கு அமையாது.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் அல்லது உயர்ந்த ஒரு பரீட்சையில், உத்தியோக கடமைகளின் நோக்கத் துக்கு உபயோகிக்கப்படும் மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும் ;

(ஈ) பிரதம வித்தியாதிகாரியாக 3 வருடங்களுக்குக் குறையாத சேவை அல்லது கல்வி ஆலோசனையாளராக 5 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

அல்லது

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஒரு பகுதியில் அல்லது பல்கலைக் கழகம் போன்ற ஒரு நிலையத்தில் ஒரு பதவி வகிப்பதுடன் வருடம் ரூ. 16,320 க்குக் குறையாத ஒரு தொகையை உச்சப்படியாகக் கொண்ட ஒரு சம்பள அளவுத் திட்டத்தில் வருடம் ரூ. 12,480 க்குக் குறையாத ஒரு சம்பளம் பெறுபவராய இருக்க வேண்டும்.

(உ) விலக்கு அளிக்கப்படாத அபேட்சகர்கள் இப்பகுதியால் கல்விச் சட்டத்தினும் அரசினர் விதிகளினும் பிரமாணங்களினும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப் புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(அ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகை மையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ் கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**—

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப் பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டை ("ஆ" எனக் குறியிடப்ப பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர் புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத் தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலி ருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறி வித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாஸ்சூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.2.13.

2—815/1—20.2.70 ந் தேதிய வர்த்தமானி இல. 14,894

---

**No. AB. 13/X.2203/70**

## தேசிய புராதன சாசன பாலகர் திணைக்களம்

### உதவிப் புராதன சாசன பாலகர்கள் பதவி

தேசிய புராதன சாசன பாலகர் திணைக்களத்திலுள்ள உதவிப் புராதன சாசன பாலகர்கள் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங் கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—1970.3.9.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.3.13.

**குறிப்பு.**—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வர விரும்புபவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண் ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்—**

இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்—**

பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதும். நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமைந்திருக்கும்.

(i) தகுதிகாண் நிலையில், திணைக்களத்தின் தலைவரால் குறிக்கப்படும் 17 ஆம் நூற்றாண்டு இடச்சு அல்லது மத்திய கால போத்துக்கேய மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும். அத்துடன் புராதன சாசன நிர்வாகத்திலும் பயிற்சி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்—**

இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

ரூ. 6720—ரூ. 360 × 12—ரூ. 11,040 வருடாந்தம்.

4. **தேவையான தகைமைகள்—**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 9.3.1970 திகதியில் 30 வயதிற்கு மேற்படாதவராயும் (எற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயது எல்லைகள் கவனிக்கப்படமாட்டா).

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் சரித்திரம், மொழி அல்லது சட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டமும்.

(ஈ) ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்

**குறிப்பு—**

(i) சிங்களம் அல்லது தமிழில் சிறந்த தேர்ச்சியும் போத்துக்கேய மொழி அல்லது இடச்சு மொழியில் தேர்ச்சியும் மேலதிக தகைமையெனக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த சான்றிதழ்.

**குறிப்பு—**

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிக்கப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணை களத்திலுள்ள எந்த உத்தியோகத்தினருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் சண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்டக்காரர் நிரப்பித் திருப்பியனுப்பல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
13.2.1970.

2–815/2—20.2.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

AA.8/X/2204/70

## சிவில் வான் செலவுத் திணைக்களம்

### வான் செலவு உதவிப் பரிசோதகர் பதவி, தரம் I

சிவில் வான் செலவுத் திணைக்களத்தில் முதலாந்தர வான் செலவுப் பயிற்சி பெறும் பரிசோதகர் (வானூர்தியும் வான் எந்திரங்களும்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களிலான விண்ணப்பங்கள் பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. 500, கொழும்பு 1 என முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 9.3.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 13.3.1970.

**குறிப்பு—**

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரியிடப்பட்ட 9" × 4" அளவிற்குக் குறையாத முத்திரையிடப்படாத கடிதவுறையொன்றை அனுப்புதலோடு அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அப்படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டு அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை வெளிநாட்டு இலங்கை பிரதிநிதிகள் அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பினால், விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் தாம் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அதற்கு மிகக் கிட்டிய நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக் குழுச் செயலாளருக்கு அனுப்புமாறு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்கேற்ற உடல் நலமுடையவரா வென்பதை உறுதிப்படுத்துவதற்கு, அங்கீகரிக்கப் பட்ட மருத்துவத் தொழிலாளரிடம் மருத்துவச்சோதனை செய்வித் துக்கொள்ளுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத்தையும் அவர்கள் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காய செலவையும் அவ்வுத்தியோகத்தர்களே கொடுத் தல் வேண்டும்.

2. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவி நிரந்தரமானது ; உபகாரச் சம்பளத் தகுதியுடையது ; நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் முறையில் அமையும். விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துமாறு வேண்டப்படுவர்

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தமது தகுதிகாண் நிலைகாலத் துள் வானூர்தி மற்றும் வான் எந்திரங்கள் தொடர்பாக பொருத்தமான விமானப் போக்குவரத்து அதிகாரிகளால் வழங்கப்படும் விமான அமைப் புப் பேணலில் உத்தரவுச்சீட்டு " ஏ " யும் எந்திரங்கள் பேணலில் உத்தரவுச் சீட்டு " சி " யும் பெறுமாறு வேண்டப்படுவர். இதற்காக ஒரு விசேட பயிற்சி நெறி அரசாங்கத்தினால் வெளிநாட்டில் பின்வரும் நிபந்தனைகளின்படி அவருக்கு ஒழுங்கு செய்யப்படலாம் :—

(அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு பயிற்சி பெறவேண்டிய நாட்டுக்குப் போய் வர ஆகும் பயணச் செலவுகள் இலவசமாகக் கொடுக்கப்படும்

(ஆ) இப்பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் அக்காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரசாங்க நிபந்தனைகளுக் கமைய தீர்மானிக்கப்படும்.

(இ) இவர் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத் தோடு ஒப்பந்தமொன்று செய்து கொள்ளவேண்டும் :

(1) வேறுபலவற்றையும் பொறுப்பேற்பதோடு, விதிக்கப்பட்ட பயிற்சி நெறியைத் தாம் பற்றுடனும் ஊக்கத்துடனும் பயிலுவதாகவும் அப்பயிற்சியைத் திருத்திகரமாக முடிப்பதாகவும், பயிற்சி முடிந்தபின் (அரசாங்கத்தால் தீர்மானிக்கப் படும்) குறித்தவொரு காலத்திற்கு அரசாங்கத்திற்கு சேவை புரிவதாகவும் பொறுப்பேற்கத் தயாராயிருத்தல்.

(2) இவ்வொப்பந்தத்தின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் தவறியவிடத்து பயிற்சி நெறியின் முழுச் செலவையும், அதாவது (சம்பளம், படி, பயணச் செலவு, கட்டணம் முதலியன) பயிற்சியோடுறவுபட்ட செலவுகளைத் தந்துதவிய இலங்கை அரசாங்கத்திற்கும் வேறுயாதாயினும் பயிற்சி யளிக்கும் முகவர் நிலையத்திற்கும் அல்லது இவற்றிலொன் றுக்கு நேர்ந்த செலவுகளை—இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக்கொடுக்கத் தயாராயிருத்தல்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் பின் வருமாறு : **திரட்டிய வேதனம்.**—ஆண்டொன்றுக்கு 7,800 ரூபாவில் தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூபா 360 படியுயர்வாக மூன்றாண்டு களுக்கு உயர்ந்து ரூபா 8,880 வரை செல்லும் வினைத்திறமைகாண் தடையில் சித்தியெய்தியபின் உத்தியோகத்தரின் சம்பளம் ரூ. 9,600 இல் தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ. 360 படியுயர்வாக நான்கு ஆண்டுகளுக்கு உயர்ந்தும் பின் ஆண்டொன்றுக்கு 480 படியுயர்வாக ஐந்து ஆண்டுகளுக்கு உயர்ந்தும் ரூ. 13,440 வரை செல்லும்.

1969.10.1 தினத்திற்கு முந்திய சமமான அடிப்படைச் சம்பளம்.—ரூபா. 5,160—3 × 360—6,240—6,960—4 × 360 × 5 × 480 ரூபா. 10,800

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டல் வேண்டும் :—

(i) 1970.3.9 இல் 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். அரசாங்க சேவையில் உள்ளவரை மேல் வயதெல்லை நிபந்தனை கட்டுப்படுத்தாது.

(ii) சிறந்த குணமும் உடல் நலமும் உடையவராயிருத்தல்.

(iii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், பௌதிகம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருக்கவேண்டும்.

அல்லது

கணிதம், பௌதிகம் ஆகியவற்றுடன் சிரேட்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும். அல்லது மேலான கல்வித் தகைமைகள்.

(iv) வானூர்தி எந்திரம் இவை பேணுவதில் 5 ஆண்டிற்கு குறையாத அனுபவம்.

(v) நடைமுறையிலிருக்கும் வானூர்தி எந்திரி உத்தரவுச் சீட்டு, 30,000 இறாத்தலுக்குக் குறையாத மேல் நிறை வானூர்தியா யின் உத்தரவு வகுதி " ஏ " இல் மாட்டறையப்பட்டிருத்தல் வேண்டும். மீளிசை அழுத்தமுடைய வானூர்தியாயின் உத் தரவு வகுதி " சி " இல் மாட்டறையப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது திணைக்களத்தில் வான் செலவு உதவிப் பரிசோதகர் தரம் II பதவியில் எட்டு ஆண்டு அனுபவம்.

(vi) எல்லா வகையான வானூர்திகள், எந்திரங்கள் அவற்றுக்கான துணைக் கருவிகள் சாதனங்கள் ஆகியவை பற்றிய தேர்ந்த அறிவு.

(vii) வானூர்திகள் வான் செல்கைத் தகைமை பற்றிய நடைமுறை' செய்முறை, பரிசோதனைத் தேவைகள் ஆகியவற்றில் நல்ல அறிவு.

5. அபேட்சகர்கள், கேட்கப்படின் பின்வரும் சாதனங்களைச் சமர்ப் பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமயச் சான்றிதழ் அல்லது பாடசாலைத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்பண்புச் சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், அல்லது கலலூரி ஆசிரியர், பேராசிரியரிடம் பெற்ற தாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமை, அல்லது தொழில் நுட்பத் தகைமை அல்லது இரண்டும் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களத்தில் சித்தியெய்திய உயர் பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களோ, ' அவற்றின் படிகளோ இணைக்கப்படலாகா.

(ii) வேண்டப்படும்போது சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட் சகர்கள் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். எனி னும் அவர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை, அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு, முடிவு தேதிக்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சார்ந்த கடிதத் தொடர்புகளும், அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இந்த அரசாங்க வர்த்தமானியில் பகுதி I, தொகுதி (II) இன் தொடக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக் கமைவான பொது நிபந்தனைகளை அறிந்து கொள்வது உசிதமாகும்.

9. விண்ணப்பங்கள் பெறப்பட்டமை அறிவிக்கப்படும். விண்ணப்ப இறுதி நாளிலிருந்து ஏழு நாட்களுள் அத்தகைய அறிவித்தலைப் பெறாத அபேட்சகர் உடனடியாக அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறுபவர், தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
காலிமுகத் தலைமைச் செயலகம்,
த. பெ. 500,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 9 ந உ.

2-815/3—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

**No. AB. 64/X. 2205/69**

## காணிக் கமிசனர் திணைக்களம்

### சமூகவியலாளர் பதவி

காணி ஆணையாளர் திணைக்களத்திலுள்ள சமூகவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்டு செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் :—**1970.3.9.**

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் :—**1970.3.13.**

**குறிப்பு.**—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை அஞ்சல் மூலமாக அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை ஒட்டப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வர விரும்பவர் அரசாங்க சேவையிலிருப்பவரா அல்லது அல்லாதவரா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்கு கடைசித் திகதி வரைக்கும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் அவ்விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அந்நாட்டுக்கு மிகவும் கிட்டியுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கின்றார்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு மருத்துவச் சோதனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்களிடம் செலுமாறு கேட்கப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய கட்டணத்தையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்துதல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரிமையற்றதுமாகும். தெரிவு செய்யப்படுவோர் அரசாங்க சேவை சகாய நிதிக்குப் பணம் செலுத்துதல் வேண்டும். இப்பதவி நியமனம் 3 வருட காலப் பரிசீலனைக்கு உட்பட்டதாகும்.

**3. சம்பளமும் படிகளும்—இப்பதவிக்குரித்தான சம்பளமும் படிகளும் பின்வருமாறு.**—வருடமொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 ம் 11 × 480—16,320 (ரூபா 13,920 ல் இரண்டு வருட நிறுத்தமும் ரூபா 8,880 க்கும் ரூபா 14,400 க்கும் முன்னதாக வினைத்திறமைகாண் தடையுண்டு).

**குறிப்பு.**—(1) நியமனம் பெறுபவர் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் (பி. ஏ.) பட்டத்திற்கு மேல்ப்படிப்புள்ளவர் தெரிவு செய்யப்பட்டால் தெரிவு செய்யப்படுபவர் வருடமொன்றுக்கு 7,800 ரூபா சம்பளத்தில் நியமிக்கப்பட உரிமையுடையவராவார்.

(2) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை அல்லது அதற்கு மேற்பட்ட பட்டத்தைப் பெறுதவிடத்து அவர் வருடம் 11,520 ரூபா சம்பள அடிப்படையிலிருந்து தகுதிகாண் நிலையிலிருந்து மேற்செல்லமாட்டார்.

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையை உடையோரென்பதற்குத் தக்க திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவரென்றும், நல்ல உடல் நலமுடையவரென்றும்,

(ஆ) 1970.3.9 ம் திகதிக்கு 22 வயதிற்குக் குறைவுபடாதவரென்றும் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியலில் கௌரவப் பட்டம் பெற்றவர் என்றும் 35 வயதிற்கு மேற்படாதவரென்றும் (அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு செல்லுபடியாகாது),

(இ) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர் அல்லது சமூகவியல் பாடத்தில் கௌரவப் பட்டம் பெற்றவரென்றும்,

5. அபேட்சகர் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காட்டுமாறு கேட்கப்படும் போது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டா),

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தையுடைய சான்றிதழ்,

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. அவற்றில் ஒன்று கல்வி அதிபரினால் அல்லது வித்தியாலயத்தின் அதிபரினால் வழங்கப்பட்ட அல்லது சர்வகலாசாலைப் போதனாசிரியரொருவரால் வழங்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்,

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் தான் பெற்றுள்ள தரத்தைக் காட்டும் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் அணைத்து அனுப்பக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பம் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அது சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எவருடைய முகவரிக்கும் நேராக அனுப்புதல் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு உரித்தான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பக்கத்தில் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது). அதன்கண் குறிப்புறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாதவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் அறிவிக்கப்படாவிடில் உடனே அரசாங்க சேவை, அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு அமைய ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவுமுடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 13 ந் உ.

**2—815/4—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894**

இல. : A B 21/X2207/70.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள கனிட்ட தொழில் நுட்ப நிலைய அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.3.9.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.3.13.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

புதிய ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம் :—

ரூபா 11,040—7 × 480—14,400 ஆகும்.

(1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 8,400—6 × 480—11,280 ஆகும்).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.3.9 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பின்வருவனவற்றி ஒன்றில் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) எந்திரவியல்.
(ஆ) கணிதம் அல்லது விஞ்ஞானம்.
(இ) வர்த்தகம் அல்லது
(ஈ) பொருளியல்.

(ii) ஐந்து (5) வருட கற்பித்தல் அனுபவமும் நிருவாக அனுபவமும் பெற்றிருப்பதுடன் சிங்களத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். எந்திரவியல் அல்லது விஞ்ஞான பட்டதாரிகளுக்கு முதன்மை அளிக்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும், எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஞ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது,

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 13 ந் உ.

2—815/5—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரி கட்டுபெத்தை, மொறட்டுவை

### வரைஞன் தரம் II இற்கான போதனாசிரியர் பதவி

இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவையில் உள்ள வரைஞன் தரம் II இற்கான போதனாசிரியர் பதவிக்கு கீழே குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் அமையவேண்டிய விண்ணப்பங்கள் இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரிப் பணிப்பாளருக்குப் பதிவுத்தபாலில் 9.3.1970 இற்கு முன்னதாக அல்லது அன்றே கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்நியமனம் மூன்று வருடத் தகுதிகாண் நிலையின் கீழ் வழங்கப்படும். நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான அரசாங்க சேவையில் ஏலவே பதவிவகிக்கும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து நியமனம் ஒரு குறிப்பிடப்படும் காலத்துக்கு பதிற் கடமை நிலையில் இருக்கும்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதாக திருப்திகரமான சான்று காட்டவேண்டும் :—

(அ) 9.3.1970 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும் (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது) ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) பின்வருவன சித்தியெய்தி இருத்தல் வேண்டும் :—

(1) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை ;

அல்லது

(2) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது தோற்றப்பட்ட கல்விப் பொதுச் (சாதாரண) பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் உடன் எண்கணிதம்/கணிதம் உள்ளடக்கி ஆறு பாடங்கள் ;

அல்லது

(3) சமமான அல்லது உயர் பரீட்சை ;

(ஈ) பின்வருவன வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும் :—

(1) பொறிமுறை வரைதல் என்னும் பாடத்தைக் கொண்டிருக்கும் இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கட்டிட அமைப்புத் தராதரப் பத்திரம் ;

அல்லது

(2) இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் பொறியியல் அல்லது மின்னியல் எந்திர (சாயந்திர) தராதரப் பத்திரம் ;

அல்லது

(3) இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் (மின்னியலும் பொறியியலும்) தராதரப் பத்திரம் ;

அல்லது

(4) கல்லோயா அபிவிருத்திச் சபைத் தொழிநுட்பப் பயிற்சி நிலையத்தின் டிப்புளோமா தராதரப் பத்திரம் ;

இத்துடன்

(5) சிங்களத்தில் படிப்பிக்கும் ஆற்றல் அல்லது நியமனத்திலிருந்து 3 வருட காலத்துள் சிங்களத்தில் திறமை அடைதல்.

**குறிப்பு.**—நியமனதாரி பயிற்சி அனுபவம் அல்லது/இத்துடன் படிப்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். 5 வருட காலத்திலும் குறைவாக அனுபவம் பெற்ற ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து, அவர் தேவையான அனுபவம் பெறும்வரைக்கும் நிலையான வருடாந்த சம்பளமாக ரூபா 6,024/- உடன் தற்காலிகமாகக் கடமையாற்றுதல் வேண்டும்.

4. **சம்பளம்.**—இப்பதவிக்கான வருடச் சம்பளத்திட்டம் ரூபா 6,024—4 × 144 இத்துடன் 8 × 180—8,040. (தகுதித்தடை வருடத்திற்கு ரூபா 6,780 இற்கு முன்னரும், வருடத்திற்கு ரூபா 7,500 இற்கு முன்னருமாகும்)

5. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் அத்திணைக்களத் தலைவருக்கு குறிக்கப்பட்ட காலத்திற்கு முன் கிடைக்கப்பெற்று அங்கு தாமதமானதெனில் அத்தாமதத்திற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைக் காட்டி அவ்விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அத்திணைக்களத் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பதாரிகள் தத்தம் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலம் அல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சானறிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) உயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழும், தொழிற்தராதரச் சான்றிதழும் ;

(இ) விண்ணப்பதாரியின் நற்குணம், இப்பதவிப் பொருத்தம் என்பன கொண்ட மூன்று நற்சான்றுப் பத்திரங்கள்.

மு. கு.—(அரசாங்க சேவையிலுள்ளவர்கள் மேலே உள்ள உப-பந்தி (இ) இற்குரிய சான்றிதழ்கள் அனுப்ப வேண்டுவதில்லை).

7. விண்ணப்பமும் பிற தேவையான சாதனங்களும் உத்தியோக ரீதியாக பணிப்பாளர், இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரி, கட்டுபத்தை, மொறட்டுவை என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் எவரின் தனிப்பெயரிடப்படாது அனுப்பப்படுதல் வேண்டும்.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பகுதி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறது.

9. விண்ணப்பங்களுக்குப் பதிலுரை வழங்கப்படமாட்டாது. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் " வரைஞர் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் " என குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

எல். எச். சுமணதாசா,
பணிப்பாளர்,
இலங்கைத் தொழிநுட்பக்கல்லூரி.

இலங்கைத் தொழிநுட்பக்கல்லூரி,
கட்டுபெத்தை, மொறட்டுவை,
1970 ம் ஆண்டு சனவரி மீ 10 ந் உ.

## விண்ணப்பப் படிவம்

### இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை வரைஞன் தரம் II இற்கான போதனாசிரியர் பதவி

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றங்கள் உடனே அறிவித்தல் வேண்டும்)

3. இனம் : ————.
(பரம்பரை வழியான இலங்கைக் குடியினரா, அல்லது பதிவு மூலமான இலங்கைக் குடியினரா எனக் குறிப்பிடுக. பதிவுமூலம் இலங்கைக் குடியினராயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்ப முடிவுநாளில் சரியான வயது :—
வருடம் :————, மாதம் :————, நாள் :————.
(ஆ) பிறந்த திகதி :—
வருடம் :————, மாதம் :————, நாள் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரம் இணைக்க)

5. பிறந் இடம் :—
(அ) விண்ணப்பதாரர் : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தையார் : ————.
(இ) விண்ணப்பகாரரின் தகப்பன் வழிப் பேரனார் : ————.
(ஈ) விண்ணப்பகாரரின் தகப்பன் வழிப் பூட்டனார் : ————.

6. (அ) விவாகமானவரா, விவாகமாகாதவரா, விதவையா அல்லது மனைவியிழந்தவரா ? : ————.
(ஆ) விவாகமானவரெனின் :————.
(1) விவாகத் திகதி : ————.
(2) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் பயின்ற பாடசாலைகள், கல்லூரிகள் பிற நிறுவனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | தொழில்/தொழில்நுட்பக் கல்வி இருப்பின் | | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை/ கல்லூரி | இருந்து | வரை | நிறுவனம் | இருந்து | வரை |
| | | | | | |

(ஆ) இறுதிப் பாடசாலையினின்றும் விலகிய திகதி : ————

8. கல்வித் தகைமையும், சித்தியடைந்த இறுதிப் பரீட்சையையும் திகதியுடன் தருக : —
(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.
(இ) தமிழ் : ————.

9. தொழில் அல்லது/உடன் தொழில் நுட்பத் தகைமைகள் ஏதாவது இருப்பின் அவற்றின் (அ) திகதிகளும், (ஆ) நிறுவனங்களின் பெயர்களும் : ————.

10. வாசித்தல், எழுதுதல், உரையாடல், உரைபெயர்த்தல் என்பவற்றின் திறமை : ————.
(அ) சிங்களம் :————, (ஆ) தமிழ் :————, (இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள். விளம்பரத்திற் குறிப்பிடப்பட்ட விசேட தகைமை/அல்லது அனுபவம் உண்டா ? அப்படியாயின் திகதிகளுடன் முழு விபரங்களையும் தருக : ————.

12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் (அ) திகதி, (ஆ) வழக்கின் எண், (இ) குற்றத் தீர்ப்பின் விபரம் என்பனவற்றைத் தருக : ————.

13. கடன் தொல்லைகள் உண்டா ? அவ்வாறுயின் அதன் விபரங்கள் : ————.

14. வேறு விபரங்கள் (விசேட உரிமை முதலியன) : ————.

15. குணச்சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும், பதவிகளும். இச்சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைக்குக. ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டுவதில்லை.

16. முன்னை நாட் படைச் சேவையாளரெனின், பின்வரும் விபரங்கள் :—
(அ) கூறு : ————.
(ஆ) வரிசைப்பதவி : ————.
(இ) சேர்ந்த விலகிய திகதி : ————.

17. (அ) பாடசாலையினின்றும் விலகியதிலிருந்து உத்தியோகம் :—
(1) வகித்த பதவி : ————.
(2) நியமனத்திகதி : ————.
(3) விலகிய காரணம் : ————.

(ஆ) அரசாங்கத்தில, அல்லது உள்ளூர் அதிகாரத்தில் முன்னர் தொழில் பெற்றவரெனின், நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ என்றும் அது முடிவுற்ற நேரத்தினது விபரங்களைத் தருக : ——
(அ) தொழில் : ————.
(ஆ) திகதிகள் : ————.
(இ) சேவை முடிவுற்ற காரணம் : ————.

18. தற்போது உத்தியோகத்திலிருப்பின், பின்வருவன :—
(1) பதவியும், பதவித்தரமும் : ————.
(2) இளைப்பாறற் சம்பள உரிமை உடையதா, தற்காலிகமானதா அல்லது சந்தர்ப்பமானதா : ————.
(3) தற்போதைய படிகள் தவிர்ந்த சம்பளமும் அளவுத்திட்டமும் : ————.
(4) அடுத்த ஏற்றத் திகதி : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செயயப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் ; நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

....................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

2-734—20.2.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராலயங்களிலுள்ள வெற்றிடங்கள்

### பொது எழுதுவினைஞர் சேவை—எழுதுவினைஞர் பதவிகள்

1969 யூன் 20 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில், பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பு எழுதுவினைஞரிடமிருந்து, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்தூதரங்களிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி வெளியிடப்பட்ட அறிவித்தலைப் பார்க்க.

அவ்வறிவித்தலில் 35 வயதிற்கு மேற்படக்கூடாதென விதிக்கப்பட்ட வயதுக் கட்டுப்பாடானது, வெளிநாட்டிலுள்ள ஓர் இலங்கைத் தூதரகத்தில் முன்பு ஒருமுறை சேவை செய்த பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பு எழுதுவினைஞர்களுக்குப் பொருந்தாது.

அத்தகையோர், மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் கண்டுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள படிவத்தில், எந்த இலங்கைத் தூதரகத்தில் சேவை செய்தாரென்பதையும், அவ்வாறு எவ்வள காலம் சேவை செய்தாரெனபதையும் குறித்து, விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 1970 மார்ச் 15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவே இந்த அமைச்சை வந்தடைய வேண்டும்.

சீ. குணசிங்கம்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சின் நிரந்தரச் செயலளாருக்காக.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
செனேற் கட்டிடம்,
கொழும்பு—1.
1970, பெப்புருவரி 12.

2-824—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

இல. வெ. மு./4/89

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### இந்தியாவில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1970

16.1.70 ஆந் திகதிய 14,889 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான மேற்குறித்த விடயம் பற்றிய 8.1.70 ஆந் திகதிய அறிவித்தலில் 1 ஆம் பந்தியின் கீழுள்ள (அ) ஆம், (ஆ) ஆம், (இ) ஆம், (ஈ) ஆம் விடயங்கள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய விடயத்தை இடுவதன் மூலம் அவ்வறிவித்தல் இத்தால் திருத்தி அமைக்கப்படுகிறது :

"(அ) எத்துறையிலுமான பட்டப் பின் படிப்பு அல்லது ஆராய்ச்சி வேலை "

2. இத்திருத்தம் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 25.2.70 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, காலச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, காலச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ஆந் உ.

2-682—20.2.70 ந் திகதிய வர்த்தாமனி இல. 14,894

## படிப்பு விடுதலைக்கு மருத்துவ உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல்—1969–70 கல்லூரி அமர்வுக் காலங்கள்

கீழ்க் குறிப்பிட்டுள்ள (1), (3) ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள சிறப்புத் துறைகளில் பயிற்சியும், அதற்கான தகைமைகளையும் பெறுவதற்கு படிப்பு விடுதலை வழங்குவதற்கு, விண்ணப்பங்களின் முடிவுத்திகதி அளவில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும், 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆந் திகதியில் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுமான II ஆந்தர மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர்கள் கீழே உள்ள (4) ஆம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளை உடையவர்களாக இருப்பதுடன், ஏனைய இத்தகைமைகளை,

(i) ஏலவே உடையவர்களாக, அல்லது

(ii) 1970 ஒற்றோபர் 1 ஆந் திகதிக்கு முன்னர் அவற்றை உடையவர்களாக இருக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

| | (1) சிறப்புத்துறை | (2) புலமைப் பரிசில்களின் தொகை | (3) பெறுவதற்குரிய தகைமைகள் | (4) முன்தேவைப்படும் தகைமைகள் | (5) புலமைப்பரிசிலுக்குரிய கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 1. | பொதுவான மருத்துவம் | .. 2 .. | எம். ஆர். ஸி. பி. (யூ.கே.) .. | எம். டி. உடைய உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 2 ஆண்டுகள் |
| 2. | பொதுவான அறுவை வைத்தியம் | 3 .. | எவ். ஆர். சீ. எஸ். (இங்கிலாந்து) அல்லது (எடின்) | ஆரம்ப எவ். ஆர். சி. எஸ். அதனுடன் 2 வருட முழுநேர அறுவை வைத்தியப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவராயிருத்தல் வேண்டும். | 2 ஆண்டுகள் |
| 3. | மயக்க மருந்தியல் | .. 2 .. | எவ். எவ். ஏ. ஆர். சி. எஸ். .. | ஆரம்ப எவ். எவ். ஏ. ஆர். ஸி. எஸ். மயக்க மருந்தியலைத் தவிர்ந்த ஏனையவற்றில் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகளில் 12 மாதங்களுக்குப் பிணியாய் நிலையச் சிகிச்சை செய்தவர்களும், அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகளில் 15 மாதங்களுக்கு முழுநேர மயக்க மருந்தியல் சார்ந்த சிகிச்சை செய்தவர்களுமாயிருத்தல் வேண்டும். | 2 ஆண்டுகள் |
| 4. | பிரசவ வைத்தியமும், பெண் நோயியலும். | .. 1 .. | (அ) பிரசவ வைத்தியத்திலும் பெண் நோயியலிலும் எவ். ஆர். ஸி. எஸ். (எடின்) அதனுடன்/அல்லது<br>(ஆ) எம். ஆர். ஸி. ஓ. ஜீ. (பெரிய பிரித்தானியா) | (அ) வுக்கு ஆரம்ப எவ். ஆர். சி. எஸ்., உதனுடன் பிரசவ வைத்தியத்திலும், பெண் நோயியலிலும் ஒரு வருடம் தங்கியிருந்து சிகிச்சை செய்தல்,<br>(ஆ) வுக்கு (i) 12 மாதங்கள் பதிவுக்கு முன்னதான சிகிச்சையளித்தல் ;<br>(ii) 6 மாதங்கள் பொதுவான அறுவை சிகிச்சையளித்தல் ;<br>(iii) 12 மாதங்கள் பிரசவ வைத்தியச் சிகிச்சையளித்தல் ;<br>(iv) 12 மாதங்கள் பெண் நோயியல் சிகிச்சையளித்தல். | 2 ஆண்டுகள்<br>2 ஆண்டுகள் |
| 5. | குருதியியல் | .. 1 .. | எம். ஆர். ஸி. பி. (யூ.கே) .. | (i) அங்கீகரிக்கப்பட்ட வைத்திய சாலையொன்றில் 12 மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சையளித்தல்;<br>(ii) பிறிது குருதியேற்றச்சேவையில் 2 வருட வேலை. | 2 ஆண்டுகள்<br>2 ஆண்டுகள் |
| 6. | உடன்சார்ந்த மருத்துவம் | .. 1 .. | எம். ஆர். ஸி. பி. (யூ.கே) .. | உடல்சார்ந்த மருத்துவம் .. .. | 2 ஆண்டுகள் |
| 7. | கதிர்வீச்சுமூலம் நோய்வகை அறிதல் | .. 1 .. | டி. எம். ஆர். டி. .. | (i) (பொது மருத்துவ) விடுதி வைத்தியராக அல்லது (பொது அறுவை வைத்தியம்) விடுதி வைத்தியராக சேவையாற்றியதுட்பட (கதிர்வீச்சியல் தவிர்ந்த) அங்கீகரிக்கப்பட்ட வைத்திய சாலையில் 12 மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சையளித்தல் | 2 ஆண்டுகள் |
| 8. | கதிர்வீச்சுமூலம் நோய்வகை அறிதல் | 1 .. | எவ். எவ். ஆர். .. | (ii) கதிர்வீச்சியலில் 2 வருடங்கள் வேலை<br>(அ) டி. எம். ஆர். டி.<br>(ஆ) 6 வருட தகைமையுடையவர்கள்<br>(இ) கதிர்வீச்சுமூலம் நோய்வகை அறிதலில் 3 வருடங்கள் முழுநேர சிகிச்சையளித்தல் | 2 ஆண்டுகள் |

2. குறித்த சிறப்புத்துறையொன்றுக்குப் படிப்பு விடுதலை வழங்கத் தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ஒருவர் அதன் பின்னர் வேறொரு சிறப்புத் துறையில் படிப்பு நெறிக்கு மாற அனுமதிக்கப்படமாட்டார். மேலும், படிப்பு விடுதலை முடிவுற்றுத் திரும்பிய பின்னர் அச்சிறப்புத் துறையிலேயே புறநீங்கலாகத் தொழில்பார்க்க வேண்டப்படுவர். சிறப்பறிஞர்களாக அவர்கள் நியமனம் பெறுதல் சிறப்பறிஞர்களின் ஊழியர் கோப்பிலிருக்கும் வெற்றிடங்களில் தங்கியிருக்கும். சிறப்பறிஞர்களின் ஊழியர்கோப்பில் வெற்றிடங்களேற்படும்வரை இத்தகைமைகளைப் பெறும் உத்தியோகத்தர் தொடர்ந்தும், தர மருத்துவ உத்தியோகத்தர்களாக நடாத்தப்படுவர். சிறப்பறிஞர்களுக்குரிய படிகளுக்கு அவர்கள் உரித்துடையராகார்.

படிப்பு விடுதலை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்:—

(i) குறித்த காலத்துக்கு முழுச் சம்பளம் :

(ii) அரசாங்க செலவில் இங்கிலாந்துக்குப் போகவும் வரவும் பயணச்செலவு ;

(iii) (சொந்தப் படிப்புக் கட்டணங்கள் தவிர) உத்தியோகத்தர் சித்திபெறும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பு நெறிகள், பயிற்சி, பரீட்சைகள் ஆகியவற்றின் கட்டணங்கள் யாவற்றையும் மீள நிரப்பல் ;

(iv) 276 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் நியதிப்படி கொடுக்கப்பாலனவான, தீவைவிட்டு வெளியே இருக்க வேண்டிய காலத்திற்குரிய படிகள்.

3. உத்தியோகத்தர்கள்,

(i) குறித்த காலத்திற்குள் குறித்த தகைமைகளைப் பெறுதல் ;
(ii) தீவிற்குத் திரும்பிய பின்னர் 15 வருடங்களுக்கு அரசாங்கத்தில் சேவை செய்தல் (பதவியிலிருந்து நீக்கப்படல் சேவையில தொடர்ந்திருக்கத் தவறியதாகக் கருதப்படும்) ;
(iii) சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபடாதிருத்தலும், முழுநேர உத்தியோகத்தராகக் கடமை செய்தலும் ;
(iv) இந்த ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றத் தவறும் வேளையில் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப் படும் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் ஆகிய நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தமொன்றுக்கு உடன்படுமாறு வேண்டப்படுவர்.

4. மாதந்தோறும் அனுப்பப்படும் பணத்திற்கும், பயணச் செலவுக்கும் அ. செ. உ. சா. வழங்கற்பாலது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும், இவை அரசாங்க கணக்கின்பேரில் வழங்கற்பாலனவையாகும்.

5. பல்வேறு பயிற்சி நிலையங்களில் இடவசதியும் இடங்களும் ஏற்பாடு செய்தல் திணைக்களத்தின் பெருமுயற்சியாயிருக்கும். பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதுவர்மூலம் ஒழுங்குகள் செய்யப்படும் பொருட்டுத் தங்களது தேவைகள்பற்றித் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் எனக்கு அறிவிக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

6. உத்தியோகத்தர்கள், தங்களது விண்ணப்பங்களை 1970 மார்ச் மாதம் 20 ஆந் திகதிக்குப் பிந்தாமல் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படியாக பதிவஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். தங்களது விணணப்பங்களை விசேடமாகக் கருதப்படுவதற்குரிய காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை அதில் குறிப்பிடுதல வேண்டும். விண்ணப்பங்கள் கூடியவரை தாமாக விளக்கந்தரும் தன்மையுள்ளனவாகவும், நீககப்பட்டதெனக் கருதப்படும் முந்திய விண்ணப்பங்கள் தொடர்பாகவோ அல்லது அதன் தொடர்ச்சியாகவோ இருத்தலும் கூடாது. ஒன்றிற்கு மேற்பட்ட சிறப்புத் துறைகளுக்கு உத்தியோகத்தர்கள் விண்ணப்பஞ் செய்யின் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்;

சௌக்கியசேவைப் பணிப்பாளரின் அலுவலகம், கொழும்பு,
1970 ம் வருடம் பெப்புருவரி மாதம் 7 ந் திகதி.

டி. பி. குணசேகர,
சௌக்கிய சேவைப் பணிப்பாளர்.

2–638—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

இல. வெ. மு/2/205

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### நோர்வே அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் 1970/71

நோர்வே அரசாங்கத்தால் பின்வரும் துறைகளிலான படிப்புக்கு அல்லது ஆராய்ச்சி வேலைக்கு வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வகுதி " அ "** சகல துறைகளிலும் கலாநிதிப் பட்டப்பின் வேலைக்கான ஆராய்ச்சிக் கொடைகள்.

**வகுதி " ஆ "** எந்திரவியல் பாடங்கள், ஆராய்ச்சிப் படிப்புகள் ஆகியவற்றிற்கான உயர்தரப் படிப்புகள்/பயிற்சி.

**வகுதி " இ "** பின்வருவனவற்றில் தொழில்துறை, தொழில்நுட்பப் பயிற்சி.

(i) உயர்தர புவிவரலாற்றியல்.

(ii) சாரக நரம்பு உடற்றொழிலியல்.

(அ) ஈ.ஈ.ஜீ. (E.E.G.) நுண்தொழிலாளர்க்கான பயிற்சிநெறியும்.

(ஆ) வைத்தியர்களுக்கான பயிற்சி நெறிகளும்.

(iii) கடுதாசிக்கூழ், கடுதாசித் தொழில்நுட்பம்.

**மு.கு.**—புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை குறைவாகையால் குறித்த எத்தேசத்துக்கும் குறிப்பிட்ட ஒரு அளவு என்றில்லாமல் பூகோள அடிப்படையில் வழங்கப்படும்.

தமது பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர், 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி, அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—இப்புலமைப் பரிசில் சாதாரணமாக ஒரு வருடகால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு நோர்வே அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செலலும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1970 அன்று 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) (அ) **வகுதி " அ " வின் கீழுள்ள ஒரு பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்பவராயின்** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) **வகுதி " ஆ " வின் கீழுள்ள ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் எந்திரவியலில் வழங்கப்படும் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) **வகுதி " இ " (i) இன் கீழுள்ள ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கலாநிதிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) **வகுதி " இ " (ii) (அ) வின் கீழுள்ள ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின் (இரு பாலாருமான)** பயிற்றப்பட்ட தாதிகளாகவேனும் இலத்திரணியல் பதிவுத் தொழில்நுட்பங்களில் விசேட ஆர்வம் உள்ளவர்களாகவும் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

(உ) **வகுதி " இ " (ii) (ஆ) வின் கீழுள்ள ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மருத்துவப் பட்டம் பெற்றிருப்பதுடன் நரம்பியல் அல்லது நரம்பு உடற்தொழிலியல் கல்வி அல்லது இவ்விரு கல்வியும் பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) **வகுதி " இ " (iii) இன் கீழுள்ள ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கலாநிதிப்பட்டம்/விஞ்ஞான முதுமாணி/விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ; கடுதாசிக் கைத்தொழில் அனுபவம் விரும்பற்பாலது.

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

**4. அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) நோர்வேக்குப் போய்த் திரும்புதற்கான விமான மூல சுற்றுப் பயணத்தார் வகுப்புப் பிரயாணம் ;

(ஆ) ஆரம்பச் சகாயப்படியாக 1,000—1,500 குரோர்ஸ் வரை ;

(இ) சமூகக் காப்புறுதிக் கட்டணங்கள் ;

(ஈ) குறித்த நெறிக்கமைய 900 குரோர்ஸ் தொடக்கம் 1,500 குரோர்ஸ் வரை புலமைப் பரிசில் சகாயப்படி.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

**5. நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந் நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந் நேர்முகப் பரீட்சையின் போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப்பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

**6. உடன் படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், நோர்வேக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

**7. வைத்தியப் பரிட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நோர்வேயில கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புக்களுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/– பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/– பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
12.2.1970.

2–777—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

இல. வெ.மு/2/210

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தாய்லாந்து ஆசிய தொழில்நுட்பவியல் நிலையத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்—1970/71

எந்திரவியல் முதுமாணிப் பட்டம்வரை இட்டுச் செல்லும் படிப்புகளுக்கு தாய்லாந்து ஆசிய தொழில்நுட்பவியல் நிலையத்தால் வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு. 1**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2 :** சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்படல்வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்படல்வேண்டும்.

**குறிப்பு 3 :** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை :** இப்புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 21 மாதமால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு தாய்லாந்து அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன் :** அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். :–

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1970 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் எந்திரவியலில் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு 1 :** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2 :** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனல் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள் :** இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பாங்கொக்குக்குப் போய்த் திரும்புதற்கான விமான மூல ஆகக் குறைந்த பிரயாணச் செலவுடன் தாயலாந்துக்குச் சேர்ந்தடைதல் தொடர்பான செலவுகளுக்கு முற்பணமாக 500 **Bhat ;**

(ஆ) உணவுப்படியாக மாதாந்தம் 1500 **Bhat ;**

(இ) கற்கை ;

(ஈ) ஆய்கூட, மருத்துவ, பொது கட்டணங்கள் ;

(1 **Bhat**—29 சதம், ஏறக்குறைய)

**குறிப்பு :** இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை :** தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், தாய்லாந்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் தாய்லாந்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செயயப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பத் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்படல்வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமைபற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
12.2.1970.

2–776—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

சபையின் மெக்கானிக்கல் பொறியியல் பகுதியில் VI ஆம் தர படம் வரைவோர் பதவிகட்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம் (எல்லாம் உட்பட) மாதாந்தம்.**—ரூபா 400—ரூபா 15 × 7 உம் ரூபா 20 × 6 உம்—ரூபா 625/-. ரூபா 475/-க்கும் ரூபா 525 க்கும் முன்பு வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

3. **தகைமைகள்.**—

(i) வயது : 1.2.1970 ஆம் திகதியன்று 23 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.

(ii) **கல்வித்தகைமைகள்** : சி. பா. த. ப. (எஸ். எஸ். சி.) அல்லது க. பொ. த. ப. (ஜி. சி. ஈ.) (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களுடன் அல்லது இதையொத்த அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியவர்களாக விருக்க வேண்டும்.

(iii) **தொழிநுட்பத் தகைமைகள்** : கனிஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் (மின்சாரமும் மெக்கானிக்கலும்) பயிற்சி நெறியில் சித்தியடைந்திருக்கவேண்டும் ;

**அல்லது**

இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியில், மெக்கானிக்கல் பொறியியல் தகுதித்தேர்வின் மூன்று வருடப் பயிற்சி நெறியில் சித்தியடைந்திருக்க வேண்டும் :

**அல்லது**

அதையொத்த தகைமையைப் பெற்றிருக்கவேண்டும்.

**அத்துடன்**

ஆகக்குறைந்தது 3 வருட காலத்துக்கு ஓர் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்தலத்தில் சேவை செய்திருக்க வேண்டும் அல்லது பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இக்காலத்தில் ஆகக் குறைந்தது ஆறு மாதக் காலம், வரைவு அலுவலகத்தில் சேவை செய்திருக்க வேண்டும் அல்லது பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

4. விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள/சபைகளிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்கும் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபன/சபைத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபனம்/சபை மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப் பகுதியிலேனும் சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

7. தேவையான தொகையான தகுதியான விண்ணப்பகாரர்கள் கிடைக்கத்தக்கதாயில்லாதவிடத்து, பிந்திய விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5.
11.2.1970.

மாதிரிப் படிவம்

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### VI ஆம் தர படம் வரைவோர் பதவிக்கான விண்ணப்பம்

(மெக்கானிக்கல் பொறியியல் பகுதி)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி—சொந்த :————.
அலுவலக :————.

3. பிறந்த திகதி :————.
(பிறப்புச் சன்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படவேண்டும்).

4. 1.2.1970 திகதியன்று சரியான வயது—
வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

5. நாட்டினம் :————.

6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா :————.

7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.

8. கல்வித் தகைமைகள் :————.
(சித்தியெய்திய பாடங்கள், திகதிகளுடன்—பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

9. தொழினுட்பத் தகைமைகள்.:————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், திகதிகளுடன்-பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

10. சிங்களத்தில் எயதியுள்ள ஆகக்கூடிய தராதரம் :————.

11. தொழில் பயில்வோர் நிலை :

| தானபத்தின் அல்லது நிலையத்தின் பெயர் | இருந்து | வரைக்கும் |
|---|---|---|
| ———— | ———— | ———— |
| ———— | ———— | ———— |

12. வரைவு அலுவலகத்தில் சேவை/பயிற்சி :————.
(நிலையத்தின் பெயரையும் சேவை/பயிற்சிக் காலத்தையும் தருக)

13. பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலை :————.

14. தற்போதைய பதவியும் சம்பளமும் :————.

15. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் :

(1) ————.

(2) ————.

16. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ?

17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-804—20.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,894

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### விஞ்ஞான பாடங்களில் போதனாசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் விஞ்ஞான பாடங்களில் போதனாசிரியர் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் தயாரிக்கப்பட்டு 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 13ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் " விஞ்ஞான பாடங்களில் போதனாசிரியர் பதவி " எனத் தெளிவாக எழுதப்படவேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :

(i) 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது) ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய், இருக்க வேண்டும் ;

(iii) பௌதிகத்தையும் (தூய அல்லது பிரயோக) கணிதத்தையும் பாடங்களாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ;

(iv) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் பெற வேண்டும்.

**குறிப்பு.**—படிப்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் அல்லது மேற்குறித்த பாடங்களுடன் இரசாயனமும் எடுத்துப்பட்டம் பெற்றிருத்தல் அல்லது இவ்விரண்டினுள் எவையேனும் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

4. இப்பதவிக்குரிய ஒன்று திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

(i) ரூபா 6,024 — 4 × 144 — 8 × 180—8,040. இன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டத்திலான ரூபா 6,780/-, ரூபா 7,500 ஆகிய சம்பளப் படிகளைத் தாண்டிச் செல்லுமுன் நியமதாரிகள் வினைத்திறமைகாண் பரீட்சைகளில் தேறவேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் போதியளவு செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இரண்டு அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும். எனினும், 5 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரி ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும்வரை பதில் கடமை புரிபவராக ஒன்றுதிரட்டிய மாறுத வருடாந்தச் சம்பளம் ரூபா 6,024/- உடன் நியமிக்கப்படுவார்.

**குறிப்பு.**—இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் 30.9.69 வரை ரூபா 3,420 — 4 × 120 — 8 × 180 — 5,340 ஆக இருந்தது. ரூபா 4,080/-, ரூபா 4,700/- ஆகிய சம்பளங்களைத் தாண்டிச் செல்லுமுன் நியமதாரிகள் வினைத்திறமை காண் பரீட்சைகளில் தேறவேண்டும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரியபகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் ;

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு.**—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும், எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

என தெண் : பொ நி/3/240
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1970 ம் ஆண்டு பெப்ருவரி மீ 13 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

**விஞ்ஞான பாடங்களில் போதனாசிரியர் பதவி**

(தொடரெண் பொ/நி/3/240)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) : திரு./திருமதி/செல்வி: ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது: வரு. ———— மா. ———— நாள் : ————.
(ஆ) பிறந்த திகதி : வரு. ———— மா. ———— நாள் : ————
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? . ————.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் : ————.

(2) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(3) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக் கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற் பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(4) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுது வதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண் டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உப யோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றை யும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டு விடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசை மேல் விட்டுவிட வேண்டும்.

(5) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெயயும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(6) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப் பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண் டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(7) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப் பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(8) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின முறையான அமைப்பு முறையில தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானல் அவ்வடிவங்கள் மறு படியும் கீறப்பட வேண்டும்.

(9) ஒவ்வொரு படத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்கு படுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(10) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(11) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செயயத் தவறினல் உமது விடைத்தாள் காணமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவக னிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(12) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமனசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2,
2–812—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### பம்பலப்பிட்டி அடுக்குமாடிகளில் ஜன்னல்களை மறுபடி நிறுவுதல்

தேசிய வீடமைப்புத் திணைக்களம் கேள்விச்சபைத் தலைவரால் மரத்தால் செய்யப்பட்ட யன்னல்களோடு பளிங்குக் கண்ணாடி யன்னல்களை மறுபடி வைப்பதற்காக 1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6 ந் வ. வெள்ளிக் கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமுகமளிக்க லாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியிய லாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதி களாக அனுப்பப்படவேண்டும். மேலும் தேவையான விபரங்கள்யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொதுவேலைத் திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசா ங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கட்டட வேலைக் காக ரூபா 25,000/– க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச்சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பரிடம் ரூபா 25/– செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1970 ம் ஆண்டு பெப்ருவரி மீ 27 ம் வ. நண்பகல் 12 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு. 2,
1970 ம் ஆண்டு பெப்ருவரி மீ 15 ந் வ.
2–808—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்புத்துறைமுகத்திலிருந்தும், திரிகோணமலைத்துறைமுகத்திலி ருந்தும் பண்டங்களைக் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனத் திற்கு அகற்றி அனுப்புவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் 25.2.1970 பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

கேள்விப் பத்திர படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் விண்ணப் பமூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு. 2.
1970 பெப்பிரவரி 8.
2–778—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### முகத்துவார விளையாட்டு மைதானத்தில் புல் வளர்ப்பதற்கான கேள்வி

முகத்துவாரத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில் நிலத்தைப் பண்படுத்தி, புற்களை வளர்ப்பதற்கான கேள்விப் பத்திரங்களை கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970 மார்ச் 9 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

கேள்வி நிபந்தனைகளையும், கேள்விச் சாதனங்களையும் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/– ஐச் செலுத்திக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களில் கேள்விகளைத் தயாரித்தல் வேண்டும். கேள்விப் படிவங்கள் 1970 மார்ச் 8 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

1970 மார்ச் 9 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணி அளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 10 ந உ.

2–738—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## கச்சேரி—பொலன்னறுவை

கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அமைப்பு வேலைக்காக 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி பொலன்னறுவை மாவட்ட அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப் பத்திரங்களும், முத்திரையிடப்பட்டு (சீல்), பதிவுத் தபாலில், மாவட்ட அதிபர், பொலன்னறுவைக்கு அனுப்பப்பட வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நேர்முகமாக எடுத்துச் செல்லப்பட்டு, பொலன்னறுவைக் கச்சேரியின் உதவித் திணைக்கள அதிபரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கடித உறையின்மேல, குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்திலுள்ள வேலையின் விபரம் காட்டப்படல் வேண்டும். தனித்தனியான வேலைக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரம் அனுப்பப்படல்வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெறக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட படிவங்களில் ரூபா. 50/ கொண்ட கட்டுப்பணத்துடன் அனுப்பப்படவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களைப் பொலன்னறுவைக் கச்சேரியில் பி. ப. 4.30 மணிவரை 20 ம் திகதி பங்குனி மாதம் 1970ம் ஆண்டு வரை பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில வைத்து கேள்விப் பத்திரக் குழுவினரால் திறக்கப்படும். கேள்விப் பத்திரம் அனுப்புபவர்களோ அல்லது அவர்களால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டதும் விண்ணப்பக்காரரின் பெயரும், அவரால் கேட்கப்பட்ட தொகையும், கேள்விப் பத்திரக் குழுவினரால் அறிவிக்கப்படும்.

6. அங்கீகரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வித்தொகை எழுத்திலும் எண்ணிலும் கேள்விப்படிவத்தில காட்டப்படல் வேண்டும். எழுத்தில் காட்டப்பட்ட தொகையும், எண்ணிலுள்ள தொகையும் வித்தியாசப்படின் கேள்விப்பத்திரம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

7. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள், கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின், அல்லது மறுப்பின், தனது கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழக்கவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல், கேள்விப்பத்திரக்காரருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டால், அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

8. கேள்விப்பத்திரங்களனைத்தையும் நிராகரிக்கவோ அல்லது அவற்றின் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளப் பொலன்னறுவை மாவட்ட அதிபருக்கு உரிமையுண்டு.

9. கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதப்பட்ட இடங்களும் பிழை திருத்தப்பட்ட இடங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

10. பொலன்னறுவை மாவட்ட அதிபரிடமிருந்து முன்னமே எழுத்து மூலம் வழங்கப்பட்ட அனுமதியின்றி கொந்தராத்தை வேறு ஒருவருக்கு மாற்றவோ குத்தகைக்குக் கொடுக்கவோ கூடாது.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 10 வீதத்தைப் பிணைப்பணமாகப் பொலன்னறுவைக் கச்சேரில் கட்ட வேண்டும். கச்சேரியில் குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்ட பின்பே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

12. கேள்விப்பத்திரங்கள் பெறுவோர், பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெறும் விண்ணப்பப்படிவங்களை நுட்பமாய் வாசித்து, அதில் தேவைப்படும் விளப்பங்களிருப்பின், அவற்றைப் பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

13. ஒவ்வொரு கேள்வி விண்ணப்பப் பத்திரத்துடனும், தகுதியுள்ள இரண்டு பிணையாளரிடம், பிரஸ்தாப வேலைகள் நிரணயிக்கப்பட்ட விதிகளுக்கமைய முடித்துக்கொடுக்கப்படும் என்ற கடிதமும் அணைக்கப்படல் வேண்டும்.

14. தெரிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் இலங்கையரையே குறிப்பிட்ட இவ்வேலைக்கு அமர்த்த வேண்டும்.

15. (அ) கூட்டுறவுச் சங்கங்களால் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்களுடன் உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரியினால் சங்கத்தின் பொருளாதாரத் தகுதியையும் அச்சங்கத்தின் சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்பையோ அல்லது வேறு ஸ்தாபனங்களில் உள்ள சேமிப்பு விபரங்களையோ காட்டும் கடிதமும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) தனிப்பட்டோரிடமிருந்து அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களுடன் அப்பகுதி காரியாதிகாரியினால், குறிப்பிட்ட நபர் இக்கொந்தராத்தை ஏற்கும் தகுதி நிறைந்தவரென்றும், அவரது சேமிப்பு வங்கியின் கணக்கு முதலியனவற்றை குறிப்பிட்டுப் பெற்ற கடிதமொன்றும் அணைக்கப்படல் வேண்டும்.

16. மாவட்ட அதிபர், தனிப்பட்டோரிடமிருந்தோ அல்லது சங்கங்களிடமிருந்தோ பெற்ற கேள்விப்பத்திரங்களை, அவை அவரது அபிப்பிராயத்தின்படி பொருளாதாரத் தகுதியற்றவை எனக் கருதின் நிராகரிக்கும் உரிமையை தன்தாக்கிக் கொண்டுள்ளார்.

17. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகளுக்கோ கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கலாம்.

எ. பி. ஜி. ஜயசேகர,
மாவட்ட அதிபருக்காக,
பொலன்னறுவை.

கச்சேரி, 11.1970
பொலன்னறுவை,

### அட்டவணை

1. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 5–பீ 1, புது நகரம் திருத்துதல்
2. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3ஏ–2, புது நகரம் திருத்துதல்.
3. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3ஏ– 3, புது நகரம் திருத்துதல்.
4. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3ஏ– 4, புது நகரம் திருத்துதல்.
5. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3ஏ– 6, புது நகரம் திருத்துதல்.
6. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3இஸட்–2, புது நகரம் திருத்துதல்.
7. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3இஸட்–5, புது நகரம் திருத்துதல்.
8. உள்நாட்டு அசைச்சரின் விடுதி இல. 3இஸட்–7, புது நகரம் திருத்துதல்.
9. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3இசட்–11, புது நகரம் திருத்துதல்.
10. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 12, கதுருவெல, திருத்துதல்
11. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 13, கதுருவெல, திருத்துதல்
12. கதுருவெலயில் உள்ள பிரிவுக் காரியாதிகாரியின் கந்தோரிலும் மக்கள் வங்கிக் கந்தோரிலும் உள்ள நீர்க் குழாய்கள் திருத்துதல்.

2–736—20.2.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,894

## கச்சேரி—மட்டக்களப்பு

**பழுது பார்க்கப்படாத நில மோட்டார் வாகனம் விற்பனை**
**2 சிறி 4594**

மட்டக்களப்பு கச்சேரி ரெண்டர் சபைத் தலைவரால், 1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 16ந் திகதி மு. ப. 10.00 மணி வரைக்கும், சீல் செய்யப் பட்டுள்ள ரெண்டர் பத்திரங்கள் கச்சேரி வளவுக்குள் மேற்குறிக்கப்பட்ட வாகனம் விற்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாளே இது திறக்கப்படும். ரெண்டர் பத்திரங்கள் அனுப்பிய யாவரும், ரெண்டர் திறக்கும்பொழுது பிரசன்னமாக இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

2. ரெண்டர் பத்திரம் விநியோகிப்பதற்கு முன்பு திருப்பிக்கொடுக்கப் படும் ரூபா 100/- மட்டக்களப்புக் கச்சேரியில் கட்டப்படல்வேண்டும். 1970ம் ஆண்டு மார்ச் மாதம் 15ந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் ரெண்டர் பத்திரங்கள் விநியோகம் செய்யப்படும். ரெண்டர் பத்திரங்கள் பதிவு செய்த தபாலமூலம் தலைவர், ரெண்டர் சபை, கச்சேரி, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கோ அல்லது நேர்முகமாகக் கொடுப்பின், கச்சேரியிலுள்ள காரியாலய பரிபாலனருக்குக் கொடுக்கவும். ரெண்டர் அனுப்பப் படும் உறையின் இடதுமேற் பக்கத்தில் "ரெண்டர் 2 சிறி 4594" என்று எழுத வேண்டும்.

3. மட்டக்களப்பு அதிபருடைய அனுமதியுடன் வேலை நாட்களில், கந்தோர் நேரத்தில் கச்சேரி வளவுக்குள் வாகனத்தைப் பார்க்கலாம்.

4. சித்தியடைந்த ரெண்டர் செய்யப்பட்டவர் கேட்கப்பட்டுள்ள முழுப் பணத்தையும் கொடுத்து ரெண்டர் ஏற்கப்பட்ட ஒரு கிழமைக்குள் வாகனத்தை ஏற்க வேண்டும்.

5. எதுவித காரணமுமில்லாமல் ஏதாவது ஒரு ரெண்டரையோ அல்லது எல்லா ரெண்டர்களையுமோ இரத்துச்செய்வதற்கு மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள ரெண்டர் சபைத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

6. வேறு விபரங்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஈ. ஜே. எட்கார் பெர்னாந்து,
மேலதிக அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
மட்டக்களப்பு,
9, பெப்ரவரி 1970.

2–799—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**மகா கனத்தராவ உபபிரிவு**

மகா கனத்தராவ உபபிரிவில் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வடமத்திய பிரிவு, பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் ; அதன் பின் உடனே திறக்கப்படும் :—

(1) மகா கனத்தராவ வலப்பக்க பிரதான வாய்க்கால் 5க.–7கட்டை வரை உள்ள றோட்டிற்கு கல்போட்டுத் தார் ஊற்றல்,

(2) மகா கனத்தராவ வலப்பக்க பிரதான வாய்க்கால் 7க.–8க. வரை உள்ள றோட்டிற்கு கல்போட்டுத் தார் ஊற்றல்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 48,000 திற்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விகளுக்கான வெற்றுப் பத்திரங்களை மகாகனத்தராவ, அனுராதபுரம், ருசாங்கனை, பதவியா ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் காரியாலய நேரங்களில் 13.3.70 நண்பகல் 12 மணி வரை கேள்விக்கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பெற்றுககொள்ள லாம். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியின் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளை யும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இக்கேள்விகளுக்கான மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் மகா கனத்தாரவ உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாகனத்தராவ உபபிரிவு.

மிகிந்தலை, 7.2.70.

2–639—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**அநுராதபுர உபபிரிவு**

அநுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 17 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| துருவில்ல குளத்திற்கு திருத்த வேலைகள் செய்தல் .., .. | 33,000 .. | 50 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங் கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விப்பத்திரங்கள், அநுராதபுரம், மகாகந்தராவை, இராசாங்கணை, பதவிய ஆகிய நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ம் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர், தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக மேற்கூறிய தொகையைக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவேண் டும். அல்லது கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. மேலதிக விபரங்களை அநுராதபுர நீர்ப்பாசன உபபிரிவுக் கந் தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அநுராதபுர உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
அநுராதபுரம்,
1970 ம் ஆண்டு பெப்ரவரி மீ 9 ந் உ.

2–677—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அநுராதபுரம் உபபிரிவு

வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் உபபிரிவின் கீழ் உள்ள வன்னியன் குளத்தில் " தொழிலாளரின் நிரந்தர இரட்டைக் குடிசைகள் " கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 1970 ம் ஆண்டு பங்குனி 17 ம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 18,500/-க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் அனுராதபுரம், மகா கனந்தராவ, பதவிய, இராஜாங்கனை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு பங்குனி 13 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகத்துடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்க முன் கேள்விக் கட்டணமாக ரூபா 25/- ஐக் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உப பிரிவுக் கந்தோரில், அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அனுராதபுரம் உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
அனுராதபுரம்,
1970 ம் ௵ மாசி ௴ 10 ந் ௳.

2-741—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

கீழ்க்காணும் வேலைகளிற்கான கேள்விப் பத்திரங்கள் பொல்கொல்ல பகுதி, மகாவலி திட்ட பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் திகதி மு.ப. 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| (1) நாவுலவில் கனிஷ்ட உத்தியோகத்தர்களிற்காய 1 ம் இலக்க தற்காலிக இரட்டை வீட்டினை அமைத்தல் .. .. | 17,000 .. | 25 |
| (2) நாவுலவில் கனிஷ்ட உத்தியோகத்தர்களிற்காய 2 ம் இலக்க தற்காலிக இரட்டை வீட்டினை அமைத்தல் .. .. | 17,000 .. | 25 |
| (3) நாவுலவில் கனிஷ்ட உத்தியோகத்தர்களிற்காய 3 ம் இலக்க தற்காலிக இரட்டை வீட்டினை அமைத்தல் .. .. | 17,000 .. | 25 |

2. அவ்வவ்வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச்சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையன.

3. இக்கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். இதற்கான கேள்விப்பத்திரங்கள் போவதன்ன, பொல்கொல்ல, உக்குவல உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்விப்பத்திரத்தைப் பெற்று மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயம் ஒன்றில் அல்லது ஒரு கச்சேரியில் மேற்காட்டிய கேள்விக் கட்டணத்தைக் கட்டிய பற்றுச்சீட்டுடன் கேள்விகள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகத்தை காண்பித்து தங்கள் கேள்விக்குரிய வெற்றுப்பத்திரத்தைக் கோர வேண்டும்.

4. இக்கேள்விக்கான மேலதிக விபரங்களை போவதன்ன உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
(மகாவலி திட்டம்),
போவதன்ன.

நீர்ப்பாசனக் காரியாலயம் (எம். பீ.),
போவதன்ன, நாவுல,
1970 ம் ௵ பெப்புருவரி ௴ 2 ந் ௳.

2-740—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## இலங்கை அரச கடற்படை

திருகோணமலை கடற்படைத் துறைமுகத்திலிருந்து கீழ்க்காணும் படகுகளை மீட்டு அப்புறப்படுத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள், இலங்கை அரச கடற்படை, த. பெ. இல. 593, கொழும்பு 1 இல் உள்ள கேள்விச் சபை அதிபரால் 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) கிளப்பன் போர்க் குடாவில் ஒரு லோகத்தாலான படகு,

(ஆ) மிடில் பொயின்ரில் ஒரு மரப்படகு

(இ) கொட் குடாவிலிருந்து ஒரு மரப்படகு.

கேள்விப்பத்திரம் அனுப்புவோர் மூன்று படகுகளையும் மீட்டு அப்புறப் படுத்துவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். மூன்றுக்குக் குறைவான படகுகளை மீட்டு அப்புறப்படுத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் இப்படகுகளின் இருப்பிடங்களை அறிவதற்கு திருகோணமலை, இலங்கை அரச கடற்படை அதிபரிடம் விசாரணை செய்தால் இவ்விடங்களை அவ்வதிபரால் நியமிக்கப்படும் அங்கத்தவர் காண்பிப்பார். கேள்விகள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு பஞ்சாங்க வருட முடிவிற்குள் இப்படகுகளை மீட்டு அப்புறப்படுத்தல் வேண்டும்.

2. மேற்கூறிய சேவைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகம், கொழும்பு 1 இல் உள்ள பிரதான உத்தியோகத்தரால் (ஆதரவும் முறையும்) வழங்கப்படும்.

3. மேற்கூறப்பட்ட சேவைக்களுக்கான கேள்விப்பத்திரங்கள் கொடுக்கு முன், திரும்பிப் பெறக்கூடிய தொகை ரூபா 50 ஐ முற் பணமாகச் செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மணி ஓடர் மூலம் செலுத்தும் பணம் கடற்படைத் தளபதியின் சார்பில் இருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது அவர்களது முழுப் பெயரும், விலாசமும் கொடுக்க வேண்டும்.

4. மேலும் விபரங்கள் இரண்டாவது பந்தியில் கூறப்பட்டுள்ள அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். கதிர்காமர்,
றியர் அட்மிரல்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1,
1970 ம் ௵ பெப்ரவரி ௴ 10 ந் ௳.

2-663—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### காலி-ஹம்பன்தோட்டை வீதி 111 ஆம் கட்டையடியிலும், லுணுவை யில் லேடி கதறீன் டிறைவிலும் பாறுங்கற்கள், உடைகற்கள் ஆகியவற்றை வழங்குதல்

1,000 பாறுங்கற்களையும், 200 கியூப் உடைகற்களையும் காலி-ஹம்பன் தோட்டை வீதி 111 ஆம் கட்டையடியில் வழங்குவது பற்றி 1970.2.5 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான கேள்வி சம்பந்தமான அறிவித்தலையும்; 2,000 பாறுங்கற்களையும், 50 கியூப் உடைகற்களையும் லுணுவையிலுள்ள லேடி கதறீன் டிறைவ் என்னுமிடத்தில் வழங்குவது பற்றி 1970.2.13 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான கேள்வி சம்பந்தமான அறிவித்தலையும் பார்வையிடுக. பாறுங் கற்களைத் தகர்ப்பதற்கும், ஏற்றிச் செல்வதற்கும் தேவையான பொறித் தொகுதி களும், சாதனங்களும் தங்களிடம் உண்டு என்பதற்கான சான்றையும் இதற்கு முன்னர் பெரிய ஒப்பந்தங்களில் பாறுங்கற்களைத் தாங்கள் திறமையுடன் வழங்கியதற்கான சான்றையும் கேள்வியாளர்கள் காட்டுதல் வேண்டும்.

காலி-ஹம்பன்தோட்டை வீதி 111 ஆம் கட்டையடியில் 1,000 பாறுங்கற்களையும், 200 கியூப் உடைகற்களையும் வழங்குவது சம்பந்தமான மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசிநேரம் 1970.3.11 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரையும், அது சம்பந்தமான கேள்விச் சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நேரம் 1970.3.9 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் இத்தால் நீடிக்கப்பட்டிருக்கின்றன.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

1970 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 2 ந் உ.

2–685—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## கேள்வி அறிவித்தல்

அரசாங்கத்தில் ரூபா 15,000/- க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கீழ்க்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை புத்தளம் கச்சேரி கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) நாத்தாண்டியா, மறந்தகெல கொலனியில் 4 பொதுக் கிணறுகள் கட்டுதல்;

(2) நாத்தாண்டியா, தப்போவ அக்கர அருவ கொலனியில் ஒரு பொதுக்கிணறு கட்டுதல்;

(3) நாத்தாண்டியா, நாகாகட்டுவ கி. வி. திட்டத்தில் ஒரு பொதுக் கிணறு கட்டுதல்;

(4) நாத்தாண்டியா, பாலுவத்தை கி. வி. திட்டத்தில் ஒரு பொதுக் கிணறு கட்டுதல;

(5) நாத்தாண்டியா, மட்டாக்கொட்டுவ கடற்கரையில் ஒரு பொதுக் கிணறு கட்டுதல்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக இவ்விரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேணடும். புத்தளம் கச்சேரியில் ரூபா 25/- வைப்புப்பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக் காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்கு மான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 8 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத்தபால் மூலம், தலைவர், கேள்விச்சபை, கச்சேரி, புத்தளம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1970 ம் ஆண்டு மாசி மீ 5 ந் உ.

2-582—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

## வித்தியா பகுதி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு திருகோணமலை கல்வி அலுவலக கேள்விச்சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலை பெயர் | வேலையின் தன்மை |
|---|---|
| தி/வெள்ளமணல் சிங்கள வித்தியாலயம்.. | களஞ்சிய அறையை உள்ள டக்கிய 3 வகுப்பறைகள் |

### மாவட்டக் குறியீடு

தி/ = திருகோணமலை மாவட்டம்

### குறுக்கம்

2. கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில், அரசாங்க வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 15,000 க்கு அல்லது மேற்பட்ட தொகைகளுக்கான கட்டுவேலைகளுக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளவர்களுக்கு (ரூபா 15,000) க்குக் குறைந்த வேலைகளுக்கு நீர்ப்பாசனப் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கேள்விகள் அனுப்புதற்குத் தகுதியற்றவர்) அவர்கள் கொழும்பு 2, கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் காரியாலயத்தில் அல்லது திருகோணமலை கச்சேரியில் ஒவ்வொரு வேலைத் தொடர்பிலும் ரூபா 100 கட்டுப்பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை திருகோணமலை பிரதம கல்வி அதிகாரிக்குச் சமர்ப்பிக்குமிடத்து 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆந் திகதி மு. ப. 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். காசோலைகள், காசுக்கட்டளைகள் ஆதியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விக் கட்டுப்பணங்கள் கட்டு தற்கான பணக்கட்டும் நறுக்குகள் திருகோணமலை பிரதம கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும். மேலே குறிப் பிட்டுள்ள தொகைகளுக்குத் தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களெனச் சான்று சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பணக்கட்டும் நறுக்குகள் கொடுக்கப்படும்.

3. மேற்போந்த 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு நீர்ப்பாசனப் பகுதி, அரசாங்க வேலைப் பகுதி அல்லது கல்வி, கலாச்சார அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கமைய, அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்களும் இவ்வேலைகளுக்கு கேள்விகள் அனுப்பலாம். அங்கீகரிக்கப் பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்வு அளிக்கப்பட்டுள்ளன. கேள்விப் பத்திரம் வழங்கப்படுமுன் இச்சங்கங்கள் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்குத் தாம் பதிவு செய்யப் பட்டுள்ளவையென சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேற்போந்த 2 ம், 3 ம் பந்திகளில் காட்டியுள்ள பிரகாரம் திருகோணமலை பிரதம கல்வி அதிகாரியிடம் பெறற்பாலனவாகிய படிவங்களில், இரட்டைப்பிரதியில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும். இவரிடமிருந்து சகல விபரங்களும் தகவலும் பெற்றுக்கொள்ள முடிவ துடன் வேலைபற்றிய மாதிரிப்படிவங்களையும் இவருடைய அலுவலகத்தில் பார்வையிடலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் திருகோணமலை பிரதம கல்வி அலுவலக கேள்விச் சபைத் தலைவரின் விலாசத்துக்கு பதிவு அஞ்சல்மூலம் அனுப்பப்படவேண்டும். ஸ்தல கேள்வியாளர்கள் தமது கேள்விப்பத்திரங்களைப் பதிவு அஞ்சல்மூலம் அனுப்ப விரும்பாதவிடத்து, அவர்கள் அல்லது அவர்களுடைய முகவர் கள், காகித உறைகளில் வைக்கப்பட்டு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களைக் பிரதம எழுது வினைஞரிடம் நேரிற்கொடுத்து அவர் அதைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒரு கடிதத்தை அவரிடமிருந்து பெறவேண்டும். குறித்த காகித உறையின் மேற்பக்கத்தில் கேள்வி என்ன வேலை சம்பந்தமானதெனவும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் திருகோணமலை கல்விக் கந்தோரில் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் திகதி மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்ன மாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் உத்தியோகத்தர் அங்கு பிரசன்னமாயிருக்கும் கேள்வியாளர்களுக்கு கேட்கக்கூடியதாக கேள்வியாளர்களின் பெயர்களையும் அவர்கள் கோரி யுள்ள வீதங்களையும் வாசிப்பார்.

6. கேள்விகள் முடிவடையும் திகதியிலிருந்து 6 வார காலம்வரை தாம் கோரிய வீதங்களின்படி வேலையை மேற்கொள்ள கேள்வியாளர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

7. மேலும் தேவைப்படும் விபரங்கள் திருகோணமலை கல்வி அதிகாரியின் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம். அங்கே கேள்வி சம்பந்தமான பத்திரங்களையும் பார்வையிடலாம்.

8. 30.9.1966 க்கு முன்னர் பாடசாலை வேலைகளுக்கென வித்தியா பகுதியால் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வி அறிவித்தலின் நோக்கத்துக்காக, கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சால் பதிவு செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுவர்.

அ. சந்திரசேகரம்பிள்ளை,
பிரதம கல்வி அதிகாரி,
திருகோணமலை.

வித்தியா கந்தோர்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 12 ந உ.

2-791—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### உபயோகிக்கப்பட்டுக் கழிக்கப்பட்ட எஞ்சின்களின் விற்பனை

### பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள விற்றுத்தீர்க்கும் வளவு

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவிலிருந்து பின்வரும் இனங்களைக் கொண்ட உபயோகிக்கப்பட்டுக் கழிக்கப்பட்ட எஞ்சின்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

பெட்போட், பேர்கின்ஸ், அல்பியன், ஏ. ஈ. சி., போர்ட் வீ. 8, டொட்ஜ், கை, கார்ட்னர், ஐ. எச்., ரீ/ரிறேடர், செவ்றலே முதலியன.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதியில் நண்பகல் 12.00 மணிவரை, கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம விநியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாக ரூபா 100/- ஐக் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டினை, கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவில், வழமையான அலுவலக நேரங்களில் எஞ்சின்களைப் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

விநியோகப் பகுதி, 200, கிருல வீதி, கொழும்பு 5.

2-698—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## அரசினர் வைத்தியசாலை—கொழும்பு

### பிரசித்த ஏலவிற்பனை

பின்வரும் பழைய பொருட்கள், கொழும்பு அரசினர் வைத்திய சாலையில 1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 20 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

(1) பொருட்களை வாங்குபவர்கள், பணம் முழுதும் உடனே கொடுத்து பொருட்களையும் அப்புறப் படுத்தவேண்டும்.

(2) எந்த ஒரு பொருளையும் விற்பதா அல்லது இல்லையா என்று தீர்மானிக்கும் அதிகாரம் சௌக்கிய அதிபரிடம் உண்டு.

(3) பொருட்களை பார்வை இடுவோர் 1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 20 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை அனுமதிக்கப்படுவார்.

(4) மேலும் தேவையான விபரங்களை கொழும்பு வைத்தியசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. நாகேந்திரன்,
அத்தியட்சர்,
கொழும்புப் பகுதி வைத்தியசாலைகள்.

அரசினர் வைத்தியசாலை, கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 6 ந உ.

### பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| (1) | மோட்டார் வாகனங்களின் டயர் 550 × 16 .. | 1 |
| (2) | மோட்டார் வாகனங்களின் டயர் 650 × 18 .. | 2 |
| (3) | மோட்டார் வாகனங்களின் ரிப்புக்கள் 650 × 18 .. | 2 |
| (4) | மோட்டார் வாகனங்களின் ரிப்புக்கள் 640 × 15 .. | 7 |
| (5) | மோட்டார் வாகனங்களின் ரிப்புக்கள் 550 × 16 .. | 4 |
| (6) | மோட்டார் வாகன பட்டரிகள் .. .. | 1 |
| (7) | நிலம் மினுக்கும் மின்சார யந்திரம் .. .. | 4 |
| (8) | கை பிடி துடைப்பம் .. | 22 |
| (9) | மணி (பெரிது) .. .. .. | 1 |
| (10) | சிறு பிள்ளைகளின் கட்டில் .. .. | 1 |
| (11) | மருநது அலுமாரி (கண்ணாடி) .. | 1 |
| (12) | மர லொக்கர் .. .. .. | 1 |
| (13) | மேசை சாதாரணம் .. .. .. | 1 |
| (14) | மர பெட்டிகள் .. .. | 1 |
| (15) | புலவு வெட்டும் யந்திரம் .. .. | 1 |
| (16) | இரும்புக் கட்டில் .. .. .. | 1 |
| (17) | மேசை (ரொராசோ) .. .. .. | 1 |
| (18) | கான் கழுவும் பிரசுகள் .. .. | 2 |
| (19) | வெறும் பிஸ்கட் தகரங்கள் .. .. | 20 |
| (20) | தோடம்பழ ரசப் போத்தல்கள் .. .. | 403 |
| (21) | வெறும் தகரங்கள் .. .. .. | 10 |
| (22) | மருந்துப் போத்தலகள் .. .. | 1,500 |

2-649—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

---

# நானாவித அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

### ரீல்களிலுள்ள பத்திரிகைக் கடதாசி

ரீல்களிலுள்ள பத்திரிகைக் கடதாசியின் இறக்குமதி, இறக்குமதி உத்தரவுச் சீட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் தனி இறக்குமதியாளராகும்.

ரீல்களிலுள்ள பத்திரிகைக் கடதாசி வழங்குவதற்காக முதல்வர்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள் (ஏஜெண்டுகள்) ஆகியோர் இக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். முதல்வர்கள், உற்பத்தியாளர்கள் ஆயோரின் பெயர்கள் மற்றும் கடல் வழித் தந்தி முகவரி அடங்கிய விபரங்களுடன் கூடிய, பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், பொது முகாமையாளர், கிழக்கிலங்கை கடதாசி, ஆலைக் கூட்டுத்தாபனம், 356 யூனியன் பிளேஸ், கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப மூலம் விளக்க விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 3 ந உ.

2-655—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## கல்விநூற் பிரசுர ஆலோசனைச்சபை

### பாடப்புத்தக அங்கீகாரத்தைப் புதுப்பித்தல்

நூலாசிரியர்களும் வெளியீட்டாளரும், 31.12.70 இல் அங்கீகாரம் முடிவடைகின்ற சகல பாடப்புத்தகங்களையும் அவற்றைத் திரும்பவும் அங்கீகரிப்பது பற்றிச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் 1970 ம் ஆண்டுக்கான அங்கீகாரம் பெற்ற புத்தகங்களின் அட்டவணையில் அவற்றைச் சேர்த்துக் கொள்வதற்கும் ஆக 31.3.70 இற்கு முனைர் இந்த அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு குறித்த வருட இறுதியில் அங்கீகாரம் முடிவடைகின்ற சகல பாடபுத்தகங்களும் அத்தகைய ஒவ்வொரு வருட மார்ச் மாதம் 31 ந் திகதிக்கு முன்பாக அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென மேலும் அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. திரும்ப அங்கீகாரம் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படுமுன்னர் புத்தகங்களை திருப்பி அமைக்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பின் அத்தகைய திருப்பி அமைத்தல் செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2. எவ்வருடத்திலாயினும் 31.3.70 க்குப் பின்னர் திரும்ப அங்கீகாரம் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படும் புத்தகங்கள் ஒவ்வொருவருட முடிவிலும் சாதாரணமாக வெளியிடப்படுகின்ற அங்கீகாரம் பெற்ற புத்தக அட்டவணையிற் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாதென வலியுறுத்தப்படுகிறது.

3. ஏதாவது ஒரு புத்தகம் மார்ச் மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் திரும்ப அங்கீகாரம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பவசத்தால் அங்கீகரிக்கப்படுதலில் கால தாமதம் ஏற்பட்டமை காரணமாக அது அங்கீகரிக்கப்பட்ட புத்தக அட்டவணையிற் சேர்க்கப்படாவிடின் அதற்காக இச்சபை எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாதென்பதையும் மேலுமறிந்து கொள்க.

4. ஒரு வருட முடிவில் வெளியிடப்படுகின்ற அங்கீகாரம் பெற்ற பாடப் புத்தக அட்டவணையில் அடுத்த வருடப்பாடசாலை உபயோகத்துக்கான பாடப்புத்தகங்கள் சாதாரணமாக சேர்த்துக் கொள்ளப்படும் உரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சகல புத்தகங்களும் உரிய காலத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்ற நிபந்தனையைக் கவனிக்கும்படி நூலாசிரியர்களும் வெளியீட்டாளர்களும் வேண்டப்படுகின்றனர்.

சோமரத்ன விஜயசிங்க,
செயலாளர்,
கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

கல்வி நூற்பிரசுர ஆலோசனைச் சபை.
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் உ.

2-617—20.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,894

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | **2.1.70** | வெள்ளி | .. | **26.12.69** | வெள்ளி | பி. ப. | **3.30** |
| | | **9.1.70** | வெள்ளி | .. | **2. 1.70** | வெள்ளி | பி. ப. | **3.30** |
| | | **16.1.70** | வெள்ளி | .. | **8. 1.70** | வியாழன் | பி. ப. | **3.30** |
| | | **23.1.70** | வெள்ளி | .. | **16. 1.70** | வெள்ளி | ந. ப. | **12.00** |
| | | **29.1.70** | வியாழன் | .. | **21. 1.70** | புதன் | ந. ப. | **12.00** |
| **பெப்புருவரி** | .. | **5.2.70** | வியாழன் | .. | **28. 1.70** | புதன் | பி. ப. | **3.30** |
| | | **13.2.70** | வெள்ளி | .. | **5. 2.70** | வியாழன் | ந. ப. | **12.00** |
| | | **20.2.70** | வெள்ளி | .. | **13. 2.70** | வெள்ளி | பி. ப. | **3.30** |
| | | **27.2.70** | வெள்ளி | .. | **20. 2.70** | வெள்ளி | ந. ப. | **12.00** |
| **மாச்சு** | . | **5.3.70** | வியாழன் | .. | **27. 2.70** | வெள்ளி | ந. ப. | **12.00** |
| | | **13.3.70** | வெள்ளி | .. | **5. 3.70** | வியாழன் | பி. ப. | **3.30** |
| | | **20.3.70** | வெள்ளி | .. | **13. 3.70** | வெள்ளி | பி. ப. | **3.30** |
| | | **26.3.70** | வியாழன் | .. | **20. 3.70** | வெள்ளி | பி. ப. | **3.30** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
**1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ**

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.